**கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**மூ.மு.எண். 4070/அ1/2021, நாள். 18.03.2025**

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – சேலம் மாவட்டம், கூட்டாத்துப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி – இடைநிலை ஆசிரியர் – திரு.ப.நாராயணன் என்பவர் 19.02.2013–ல் இறப்பு வாரிசுதாரரான மகன் திரு.நா.பிரபு என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கப்பட்ட நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துரு மீது அரசின் அறிவுரையின் படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (பட்ஜெட்II)த் துறை, நாள். 18.05.2018
2. அரசாணை நிலை எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ1)த் துறை நாள். 26.02.2021
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1)த் துறை, நாள். 09.09.2022
4. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண் 2427/அ1/2021 நாள் 14.07.2021
5. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண் 4070/அ1/2022 நாள்.24.03.2023.
6. அரசு கடித (efile) எண் 4419/தொ.க.1(1))2024–1 நாள்.17.05.2024
7. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செ.மு.ந.க.எண்.26062/ஜே/இ2/23 நாள்:22.05.2024
8. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செ.மு.ந.க.எண்.060659/ஜே/இ1/2022 நாள்:13.08.2024

******

சேலம் மாவட்டம், கூட்டாத்துப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த திரு.ப.நாராயணன் என்பவர் பணிக்காலத்தில் (19.02.2013) – ல் இறந்துவிட்டார். அன்னாரின் வாரிசுதாரரான மகன் திரு.நா.பிரபு என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கப்பட்ட நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யகோரி பார்வை 5 –ல் காணும் கடிதத்தின் மூலம் கருத்துருக்கள் அனுப்பப்பட்டது.

பார்வை 2–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 7 மற்றும் 8ல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின் படி திரு.நா.பிரபு என்பவருக்கு பணிவரன்முறை செய்திட அரசினால் வெளியிடப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி பணிவரன்முறை செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

பார்வை 4–ல் கண்டவாறு கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரால் கருணை அடிப்படையில் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ள திரு.நா.பிரபு என்பவர் 16.07.2021 முற்பகல் முதல் முதலூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

அன்னார் கருணை அடிப்படையில் நியமனம் பெற்று பணியேற்ற நாளான 16.07.2021 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பின்வரும் நிபந்தனையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பள்ளிக்கல்வித் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பணிநியமனமானது, தேவைப்படும் போது அரசளவில் பதிவுசெய்யும் பொருட்டு, பள்ளிக்கல்வித்துறையால் எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாகும்.
2. தனியருக்கு மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.
3. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண்பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படவேண்டும்.
4. தனியர் தனது பணிவரன்முறை தொடர்பான இந்நிகழ்வில், அரசின் விதி தளர்வு / அரசாணைகள் தேவை என்ற நிலை எதிர்காலத்தில் எழுமாயின் ரத்து செய்யத்தக்கதாகும்.
5. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (மாவட்ட அலுவலக நடைமுறை நூல்) தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
6. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சார்ந்த பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
7. இந்த ஆணை தனியர் சமர்பித்துள்ள கல்விச்சான்றுகள் மற்றும் வருவாய்த்துறை சார்ந்த சான்றுகளின் உண்மைத் தன்மைக்கு உட்பட்டது.

இணைப்பு– அசல் பணிப்பதிவேடு – 1 தொகுப்பு.

முதன்மைக்கல்வி அலுவலர்
கள்ளக்குறிச்சி

பெறுநர்– திரு.நா.பிரபு
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
முதலூர். (உரிய வழியாக)

நகல்– 1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்கள் சென்னை. ( தகவலுக்ககாக பணிந்து அனுப்பப்படுகிறது.)
2. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), கள்ளக்குறிச்சி மாவட்டம்.